## தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18.

**அனுப்புநர்**
திரு. தயானந்த் கட்டாரியா, இஆப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273 அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

**பெறுநர்**
1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்,
2. அனைத்து செயற்பதிவாளர்கள்.

ந.க.825/2022/கூதே2(2) நாள்: 29.08.2022

ஐயா/அம்மையீர்

பொருள்: கூட்டுறவு தேர்தல்கள் – எதிர்வரும் ஒட்டுமொத்த தேர்தல்கள் 2023 (Enmasse Election 2023) - ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் – **சங்கத்துணைவிதி திருத்தங்கள் மேற்கொள்ளுதல்** – தொடர்பாக.

பார்வை 1) ஆணையத்தின் கடிதம் ந.க.825/2022/கூதே 2(1) நாள்: 29.08.2022.
2) ஆணையத்தின் கடிதம் ந.க.499/2021/கூதே2 நாள் 22.04.2021

******

கூட்டுறவுச் சங்கங்களுக்கான ஒட்டுமொத்த தேர்தல் 2023 (Enmasse Election) நடவடிக்கைகளை 2023-ல் தொடங்க வேண்டியது பற்றியும், அதற்காக மேற்கொள்ள வேண்டிய பொதுவான நடவடிக்கைகள் பற்றியும் பார்வை (1)ல் கண்ட ஆணையத்தின் கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் சங்கத்தின் தேர்தல் தொடர்பான துணைவிதிகள் சட்டவிதிகளுக்குட்பட்டு இருப்பதும் தேவையான நேர்வுகளில் துணை விதித்திருத்தங்கள் மேற்கொள்வதும் மிக அவசியமானதொன்றாகும்.

பல சங்கங்களின் தேர்தல் தொடர்பான துணைவிதிகள் 1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகள்படி இல்லை, மற்றும் உறுப்பினர்கள் சேர்க்கைக்கான தகுதிகள், உறுப்பினர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை மற்றும் அமைப்பு (Constitution) போன்றவை தொடர்பாக சட்ட விதிகளை அனுசரித்து துணைவிதித் திருத்தங்கள் (Bylaw Amendments) மேற்கொள்ளப்படவில்லை என்பது போன்ற காரணங்களின் அடிப்படையில் அச்சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகளை ரத்து செய்து மாண்பமை நீதிமன்றங்கள் ஆணை பிறப்பித்துள்ளன.

இவ்வாறு தேர்தல் நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட்டு சங்கத் தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்படும் நிலையில், இதற்காகும் நீதிமன்ற வழக்குச் செலவுகளுடன், அதுவரை தேர்தல் நடவடிக்கைக்காகச் செலவிடப்பட்ட மனித சக்தி, நேரம், பணச்செலவு (Man power, Time, Cost) ஆகியவற்றுடன் மீண்டும் தேர்தல் நடத்துவதற்காகும் செலவினங்களையும் சங்கம் மேற்கொள்ள வேண்டிய நிலை உருவாகிறது. இது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டியதும், தவிர்க்கப்பட கூடியதும் ஆகும் என ஆணையம் கருதுகிறது.

எனவே இம்மாதிரியான நிலைகள் ஏற்படாது தவிர்த்திட சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத் தலைவர் தேர்தல்கள் குறித்தும், மற்றும் உறுப்பினர்கள் சேர்த்தல், நீக்குதல் தொடர்பான சங்கத்தின் அனைத்து துணை விதிகளும் கூட்டுறவு சட்டவிதிகள்படி இருத்தல் உடனடியாக உறுதி செய்யப்பட வேண்டும் என்று ஆணையம் விரும்புகிறது.

பார்வை (2)ல் கண்ட ஆணையத்தின் கடிதத்தில் (நகல் இணைப்பு) இதுப்பற்றி ஆணையம் ஏற்கெனவே தெரிவித்துள்ளது என்பதையும் தங்களது கவனத்திற்கு கொண்டுவர ஆணையம் விரும்புகிறது.

துணைவிதித் திருத்தங்கள், பேரவைக் கூட்டத்தில் (General Body) மேற்கொள்ளப்படுவதால், அதற்கான கால அவகாசத்தை அனுசரித்து, துணைவிதி திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டிய நேர்வுகளில் அவற்றினை உடனடியாக எடுத்திட அவற்றிற்குப் பொறுப்பான அலுவலர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தவிரவும் கூட்டுறவு தேர்தல் தொடர்பான அனைத்து துணை விதித் திருத்தங்களும் தங்களது நிர்வாகக் கட்டுபாட்டில் உள்ள அனைத்து சங்கங்களிலும் மேற்கொள்ளப்பட்டுவிட்டன என்ற நிறைவு அறிக்கையினை (Completion Report) 27.10.2022-க்குள் அத்துணைவிதி திருத்தங்களுக்குப் பொறுப்பான அலுவலர்களிடமிருந்து பெற்று ஒட்டுமொத்த அறிக்கையினை ஆணையத்திற்கு 31.10.2022-க்குள் அனுப்பவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்பணி சட்டபூர்வமான பணி என்பதினாலும், விரைவில் 2023 ஒட்டுமொத்த தேர்தலை எதிர் நோக்குவதாலும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் வழக்குகளுக்கும் அவை உட்படும் வாய்ப்புகள் இருப்பதினாலும், இப்பணிகளை முடித்திட அறிவுறுத்திடவும், தவறும் அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், தங்களால் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விபரத்தினை 15.09.2022-க்குள் ஆணையத்திற்கு தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

ஆணையருக்காக

29.08.2022

நகல்: இருப்பு கோப்பு